வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல் திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1993) பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்,"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெறுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஈ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம்.

1993 ஏப்ரல் 30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"சட்டமன்றப் பேரவை விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவினை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கூட்டத் தொடரின் கடைசி நாள் இன்றாக இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானத்தைப் பேரவை ஏற்றுக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெறுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை எனக் கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) —தொடர்ச்சி.

(ஓ) உடலுழைப்புத் தொழிலாளர்கள் வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1993)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்,'' எனக் கோருகிறேன்.

@ 30—4—1993-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.